செய்தி வெளியீடு எண். 21 நாள். 10.01.2018

## சிறப்பு சுருக்கமுறைத் திருத்த வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் வெளியிட்டார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் சிறப்பு சுருக்கமுறைத் திருத்த வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் இன்று (10.01.2018) வெளியிட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

2018-ம் ஆண்டிற்கான சிறப்பு சுருக்க முறை திருத்தமானது 01.01.2018-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கணக்கிற் கொண்டு 03.10.2017 முதல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பு பணி துவங்கப்பெற்று, முடிவடைந்தது, 2018 ஆண்டிற்கான சிறப்பு சுருக்க முறை திருத்தங்களின்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் 10 தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

| வ. எண் | சட்ட மன்றத்தொகுதியின் எண் மற்றும் பெயர் | வாக்காளர்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மற்றவர் | மொத்தம் |
| 1. | 01. கும்மிடிப்பூண்டி | 129328 | 135223 | 34 | 264585 |
| 2. | 02. பொன்னேரி (தனி) | 122267 | 126484 | 59 | 248810 |
| 3. | 03. திருத்தணி | 134647 | 139608 | 29 | 274284 |
| 4. | 04. திருவள்ளுர் | 125515 | 130985 | 25 | 256525 |
| 5. | 05. பூந்தமல்லி (தனி) | 161006 | 164391 | 47 | 325444 |
| 6. | 06. ஆவடி | 195504 | 195585 | 85 | 391174 |
| 7. | 07. மதுரவாயல் | 204063 | 198622 | 119 | 402804 |
| 8. | 08. அம்பத்தூர் | 177404 | 175752 | 99 | 353255 |
| 9. | 09. மாதவரம் | 205356 | 205346 | 88 | 410790 |
| 10. | 10. திருவொற்றியூர் | 139964 | 142659 | 111 | 282734 |
| | **மொத்தம்** | **1595054** | **1614655** | **696** | **3210405** |

01.01.2018ஆம் தேதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்த ஆண்கள் 9,150, பெண்கள் 6,973, மற்றவர்கள் 5 ஆக மொத்தம் 16,128 இளம் வாக்காளர்களின் பெயர்கள் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளனர் என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.செ.மணிலா, தனி வட்டாட்சியர் (தேர்தல்) திருமதி,லட்சுமி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**